1980 பிப்ரவரி 13] [திரு. சி. கோவிந்தராசன்]

முன்பாக, குறைந்தபட்சம், அரசையாவது கலந்து செய்யக் கூடிய அளவுக்கு ஏதாவது ஏற்பாடு செய்யப்படுமா என்பதை அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: தலைவரவர்களே, அப்படிப்பட்ட பாதுகாப்புகள் நாம் தந்திருந்தாலும் கூட, செயின்ட் ஜோசப் கல்லூரி, சிறுபான்மை இனத்தவரால் நடத்தப்படுகிற காரணத்தால் அரசினுடைய அதிகாரங்கள் பெரும் அளவுக்குக் கட்டுப்படுத்தப்பட்டிருக்கிறது. அதுதான் இந்தப் பிரச்னையில் நாம் உடனடியாகத் தீர்வு காண முடியாமைக்குக் காரணம்.

(ஐ) தஞ்சாவூர் மாவட்ட வடிகால், வாய்க்கால் சீரமைப்புக் கோட்டங்கள் குறித்து.

திரு. மா. மணிமாறன்: தஞ்சாவூர் மாவட்டம் திருவாரூர் வடிகால் கோட்டம், தஞ்சாவூர் வாய்க்கால் சீரமைப்புக் கோட்டங்கள் முழுவதிலும் ஏற்பட்டுள்ள சிரமங்கள் குறித்து மாண்புமிகு வேளாண்மை—பாசனத்துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு:—தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் கொடுத்துள்ள கவன ஈர்ப்புத் தீர்மானத்தின் மீது அரசு பரிசீலனை செய்யும்.

திரு. மா. மணிமாறன்:—பேரவைத் தலைவரவர்களே, அதை நான் விளக்கிச் சொல்ல வேண்டாம். தீவிர விவசாயத் திட்டத்தில், தஞ்சை மாவட்டத்திலே குறிப்பிட்ட ஸ்பெஷல் டிவிஷன் எடுக்கப்பட்டாகி விட்டது, இப்பொழுது இரண்டு டிவிஷன்களும் க்ளோஸ் பண்ணக்கூடிய நிலைமையில் இருக்கிறது. ஆனால் அமைச்சரவர்கள் அதைக் கொடுக்கமாட்டேன் என்று சொல்லியிருக்கிறார்கள். பரிசீலனை செய்து, தஞ்சை மாவட்டத்து மக்களுக்கு உதவியாக இருப்பதற்கு, அங்கே செலவழிப்பதற்காக, வேண்டிய அலுவலர்களை மாற்றாமல் வைத்திருப்பதற்கான உறுதியினை மாண்புமிகு அமைச்சரவர்கள் வழங்கினால் தஞ்சை மாவட்ட மக்கள் நன்றிக் கடன் உடையவர்களாக இருப்பார்கள்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு:— மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தாம் கொண்டுள்ள அச்சத்தைப் போக்கிவிட்டு மிச்சத்தை கையிலே வைத்துக் கொள்ளலாம். ஆகவே கண்டிப்பாக அரசு உதவி செய்யும்.